## தலைமை நிர்ணயிக்கும் இலக்கை நோக்கிப் பாயும் அம்பாக செயல்படுகிறார் அமைச்சர் சேகர் பாபு!

# சொற்பொழிவாளர்கள் படைவரிசைக்கு அடுத்த தலைமுறையை தயார் செய்யும் உதயநிதி ஸ்டாலின்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற கருத்தியல் பேச்சரங்கத்தில் திருச்சி சிவா எம்.பி. பேச்சு

**சென்னை, நவ.20-**

**தலைமை நிர்ணயிக்கும் இலக்கை நோக்கிப் பாயும் அம்பாக செயல்படுகிறார் அமைச்சர் சேகர் பாபு என்றும் சொற்பொழிவாளர்கள் படை வரிசைக்கு அடுத்த தலைமுறையை தயார் செய்கிறார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் என்றும் சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற கருத்தியல் பேச்சரங்கத்தில் பேசிய திருச்சி சிவா எம்.பி. குறிப்பிட்டார்.**

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., துறைமுகம் மேற்குப் பகுதிக் கழகம் சார்பில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால், “என் உயிரினும் மேலான…!” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் எட்டாவது தொடர் பேச்சரங்கத்தில் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் பகுதிச் செயலாளர் மு.முரளி தலைமையில் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இப்பேச்சரங்கத்தில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. ஆற்றிய உரை வருமாறு:-**

மிகுந்த கடமை உணர்வோடு கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அவர் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் – தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர். கழகத்தின் பொறுப்பினை ஏற்ற வகையில், அவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து இளைஞர்களுக்கு ஆங்காங்கே பயிற்சி முகாம்கள் நடத்தியதோடு மட்டுமல்ல, மாவட்ட அளவில் நடைபெற்று வந்ததை கொஞ்சம் விரிவாக்கம் செய்து, சட்டமன்றத் தொகுதிகள் என்று 234 தொகுதிகளிலும் நடத்தி முடித்து, அதில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் கழகத்தின் சொற்பொழிவாளர்கள் படைவரிசைக்கு அடுத்த தலைமுறையினர் வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியோடு அனைத்து மாவட்டங்களிலும் பரந்த அளவில் இளைஞர்களை மாணவர்களை அழைத்து, பல்வேறு தலைப்புகளில் உரையாற்ற வைத்து அவர்களில் தேர்ந்தெடுத்தவர்களை, கழகத்தின் தலைவர் - தமிழ்நாட்டின் முதலமைச்சர் - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் வைத்து அறிமுகப்படுத்தி பாராட்டினார்.

### அமைச்சர் சேகர்பாபுவை பாராட்டுகிறேன்!

அதைத் தொடர்ந்து, அனைத்திலும் முந்திக் கொண்டு செயல்படுகிற அமைச்சர் சேகர் பாபு, தொடர்ந்து எட்டு நாட்களாக இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு நாளும் இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சொற்பொழிவாளர்களை உரையாற்றச் சொல்லி, கழக முன்னணியினர்களில் ஒவ்வொருவரையும் ஒரு நாளைக்கு அழைத்து கூட்டங்களை நடத்துகின்ற சீரிய கடமையினை அவர் ஆற்றியிருக்கின்றார். இந்த அரிய பணிக்காக நான் அவரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்ந்தெடுத்த வகையில் கடமையும் - பொறுப்பும் தம்பி உதயநிதி ஸ்டாலினுக்கு உண்டு. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள் இனி பணியாற்றப்போவது என்னோடுதான் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். கொள்கைகளை சுமந்து நாடெங்கும் வலம் வர இருக்கின்ற நீங்கள், கொள்கைப் பரப்பு அமைப்பில்தான் உங்களுடைய பணி எதிர்காலத்தில் அமைய இருக்கிறது.

ஒரு காலத்தில் உங்களைப்போல் ஒரு கல்லூரி மாணவனாக நான் உரையாற்றிய ஒரு கல்லூரியில் வந்து பேசியவர்தான் எதிரே உட்கார்ந்திருக்கும் தமிழன் பிரசன்னா. அன்றைக்கு அவரை இனம் கண்டோம். அவர் இன்றைக்கு கழகத்தின் முக்கியமான செய்தித் தொடர்பாளராக – ஊடகங்களில் வலிமையாக வாதாடுகிறவராக வலம் வருகின்றார்; மேடைகளிலும் பேசி வருகின்றார்.

மேடையில் பேச வருகிறவர்களுக்கு அடிப்படை பயிற்சி என்பது ஒன்று தேவை. யாரிடம் பேசுகிறோம் என்பது முக்கியம்; எது குறித்து பேசுகிறோம் என்பது முக்கியம்; எந்தச் செய்தியை அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும் என்பது முக்கியம்; எதிரே இருக்கும் மாணவ – மாணவியர்கள் பெரும்பாலும் கல்லூரி மாணவர்களாக மட்டுமே இல்லை, பள்ளி மாணவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கே பேசப்படுகின்ற கருத்துகள் கொஞ்சம் கனமானதாகத் தெரியலாம். ஆனால் அவசியமானவை.

### பொறுப்புணர்ச்சி - கடமை தேவை!

இந்த இரண்டு தம்பிமார்களும் பேசியதை நான் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு மேடையில் ஏறி நின்று பேசுகிறார் என்கிறபோது, பலருடைய கவனத்தை ஈர்க்கிறார்கள் என்று பொருள். பலருடைய மனதில் பதிய வேண்டிய கருத்துகளை சொல்ல வேண்டிய பொறுப்புணர்ச்சியும் – கடமையும் அவர்களுக்கு உண்டு. அந்த வகையில் கொடுக்கப்பட்ட தலைப்புக்குள் உருவாற்றுகிறார்களா? அந்தத் தலைப்புக்குள் பேசுகிறபோது, கருத்துக்கள் எந்த அளவில் செறிவோடு இருக்கின்றன? சொற்கள் எப்படி பயன்படுத்தப்படுகின்றன? அவர்கள் உள்ளத்தில் இருந்து ஊறி வருகின்ற புதிய சொற்களா அல்லது எங்கிருந்தாவது எடுத்து கையாள்வதா? என்பதை எல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். எதிரே கூடியிருக்கும் யாராக இருந்தாலும் அவர்களின் மனநிலை என்பது பேசுகிறவர்களின் பேச்சோடு இருக்க வேண்டும்.

இரண்டு, மூன்று உதாரணங்களைச் சொல்லலாம். உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். ரோம் சாம்ராஜ்யத்தில் மிகப்பெரிய சக்கரவர்த்தியாக – முடிசூடாத மன்னராக – சர்வாதிகாரி என்று சொல்லத்தக்க அளவிற்கு சென்றான்; கண்டான்; வென்றான் என்று ஜூலியஸ் சீசரை சொல்வார்கள். அந்த ஜூலியஸ் சீசர் அவனோடு இருந்த நண்பர்கள் மட்டுமல்ல, அவரோடு சேர்ந்து போராட்டங்களில் பங்கேற்றவர்களாலேயே படுகொலை செய்யப்படுகிறார். அப்படி நடத்தப்பட்ட படுகொலை என்பதை நியாயம் என்ற உணர்வோடு ரோம் நாட்டு மக்கள் கூடி நிற்கிறார்கள். அவருடைய சவத்தை அடக்கம் செய்வதற்காக பொது இடத்தில் மக்கள் பார்வைக்கு வைத்திருக்கின்ற இடத்தில், ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கிறார்கள். ஒரே கரகோஷம். சீசரைக் கொன்றது சரி என்ற முழக்கம் அங்கே ஒழித்துக் கொண்டிருக்கிறது. அவர்களிடம் சென்று நியாயம் பேச முடியாது. ஒவ்வொருவரிடமும் சென்று சொல்ல முடியாது.

அப்போது சீசருடைய நெருங்கிய நண்பன் மார்க்கஸ் ஆண்டனி என்பவர் இரங்கல் உரை ஆற்றுகிற வாய்ப்பை கேட்டு அந்த மேடைக்கு செல்கிறார்.

மணிக்கணக்காக யாரும் பேச வேண்டும் என்பது அவசியம் இல்லை. விவேகானந்தர் சிக்காகோவில் ஆற்றிய உரை வரலாற்றில் பதியப்பட்டிருக்கிறதே, அது வெறும் 11 நிமிடங்கள் மட்டுமேதான். ஆபிரகாம் லிங்கன் ஆற்றிய உரை என்பது வெறும் 246 சொற்கள் மட்டும்தான். மிக முக்கியமான உரைகள் எல்லாம் இப்படி குறுகிய காலத்தில்தான் இருந்திருக்கிறது.

தம்பி பிரசன்னா இங்கு சொன்னதைப்போல, நேராக ஐ.நா. மன்றத்திலிருந்து ராஜா அண்ணாமலை மன்றத்திற்கு நான் வருகிறேன். சேகர்பாபுவிற்கு நான் நேற்று ஒரு குறுந்தகவல் அனுப்பினேன். இந்திய நாட்டின் பிரதிநிதியாக நான் ஐ.நா. மன்றத்திற்கு சென்றிருந்தேன். ஐ.நா. மன்றத்திற்கு செல்லுகிற எல்லோருக்கும் பேசுகிற வாய்ப்பு கிடைக்காது. ஐந்து, ஆறு பேருக்கு மட்டும்தான் தருவார்கள். அந்த ஐந்து, ஆறு பேருக்கும்கூட பொது சபையில் உரையாற்றுகின்ற வாய்ப்பு கிடைக்காது. குழு கூட்டங்கள் என்று சொல்லப்படுகின்ற ஒரு அரங்கத்தில் உட்கார்ந்த இடத்தில் பேசுகிற வாய்ப்புதான் தரப்படும். அந்த நிலையில் சென்றிருந்த 12 பேரில் பொது மகா சபையில் பேசுகிற வாய்ப்பு எனக்கு மட்டுமே தரப்பட்டது. தரப்பட்ட தலைப்பு என்பது, இங்கே கிட்டத்தட்ட நீங்கள் பேசுவதுதான். சமூக பொருளாதார மாற்றங்களுக்கான ஒரு குழுவின் கூட்டம் அது. நான் அதில் உரையாற்ற வேண்டும். ஒரு நாட்டின் பிரதிநிதி என்பதோடு, 193 நாடுகள் கூடியிருக்கும் மன்றம் அது. உலகம் முழுவதும் பார்க்கும் அளவிற்கு, அவர்களுக்கு உடனடியாக தகவல் ஒளிபரப்பு தொடர்பு வசதிகள் எல்லாம் உண்டு.

### யாதும் ஊரே யாவரும் கேளிர்!

மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நான் பேச செல்கிறபோது, என்னுடைய உரை – நம்முடைய வெளியுறவுத் துறையினால் அங்கே நியூயார்க்கில் இருக்கும் ஐ.நா. மன்றத்திற்கு நமக்கு இருக்கும் பிரதிநிதி அவர்களுடைய அதிகாரிகள் மேற்பார்வையில்தான் அந்த உரை தயாரிக்கப்படும். அந்த உரையின் முடிவில் ‘வசுதேவ குடும்பம்’ என்று ஒரு வார்த்தை வருகிறது. அது சமஸ்கிருத வார்த்தை. அதனுடைய பொருள், ‘எல்லோரும் ஒரு குடும்பம்’ என்பதைப் போல. அதைப் பார்த்துவிட்டு நான் சொன்னேன், இதிலே ஒன்றை சேர்க்க வேண்டும் என்று நான் விரும்பினேன். அவர்கள் அப்படி பழக்கம் இல்லையே என்றார்கள். நான் முரண்பாடாக எதையும் தரப்போவதில்லை. சற்றேறக்குறைய நீங்கள் சொல்லியிருப்பதை ஒட்டி அல்லது அதைவிட சிறந்த கருத்து என்றேன். என்ன? என்று கேட்டார்கள். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று கூறினேன். பொருள் கேட்டார்கள். உலகம் முழுவதும் ஒன்று, எல்லோரும் உறவினர்கள். கேளிர் என்றால், உறவினர் என்று பொருள். கேளீர் என்றால், செவிகளால் நான் கேட்பது. கணியன் பூங்குன்றனார் என்ற தமிழ் கவிஞர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய இது, தமிழர்களின் அடையாளங்களில் ஒன்று. இரண்டே இரண்டு வரிகளில் சொல்லலாம். தமிழன் யார் என்று கேட்டால், இரண்டு பூஜ்ஜியங்களை உடையவன். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’, ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’. உலகம் முழுவதும் ஒன்று, எல்லோரும் உறவினர்கள். ஆனால், எல்லோரும் ஒன்று என்பதற்குத்தான், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். பின்னர் பரிசீலனுக்கு பின்னால் அனுமதித்தார்கள். நான் அத்தோடு நிறுத்தவில்லை. கடுமையான குளிர் அமெரிக்க நாட்டிலே. ஆனால் அன்றைக்கு நான் பேச செல்கிறபோது, நான் இந்திய நாட்டின் பிரதிநிதி. தமிழ்நாட்டில் இருந்து வருகிறேன் என்பதை உணர்த்த வேண்டும் என்பதற்காக, வேட்டியும் ஜிப்பாவும் அணிந்து சென்றிருந்தேன். எப்படி? ஏன்? என்றார்கள். ஆப்பிரிக்கா வைச் சார்ந்தவர்களும், அரேபிய நாட்டைச் சார்ந்தவர்களும் பாரம்பரிய உடையோடு வருகிறார்கள். நான்



தமிழ்நாட்டைச் சார்ந்தவன் என்ற உடையோடு வருகிறேன். பேசி முடிக்கிறபோது ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது உலகம் முழுவதும் ஒலித்தது.

### கழகக் கூட்டத்தில் பேசுவதுதான் முதல் கடமை!

எனக்கு மிகப்பெரிய பெருமை. நான் அங்கே செல்ல நேர்ந்தது யாரால், என் பெற்றோராலா, இவர்களெல்லாம் சொன்னதைப்போல கற்ற கல்வியினாலா, இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்தினால்தான். அங்கே பேசி முடித்துவிட்டு என்னோடு வந்தவர்கள் எல்லாம் வேறு நாடுகளுக்குப் சென்றிருக்கிறார்கள். இங்கிருந்து அமெரிக்கா செல்வதற்கே 20 மணி நேரம் ஆகிறது. இவ்வளவு பெரிய பயணத்தை வீணாக்க வேண்டாம் என்று பல நாடுகளுக்கு செல்கிறபோது, நான் மட்டும் என்னுடைய பயணத்தை முன்னதாக முடித்துக் கொண்டு உடனே கிளம்பி டெல்லி வந்து, டெல்லியில் இருந்து கிளம்பி தாமதமாக விமானம் வந்து சேர்ந்து, இங்கே வருகிறேன். அந்தத் தகவலையும் நான் சேகர்பாவிற்கு சொன்னதற்குக் காரணம், நிகழ்ச்சி நடத்துபவர்களுடைய பதட்டம் எனக்குத் தெரியும். நானும் ஒரு காலத்தில் நிகழ்ச்சிகளை நடத்தியவன்தான். எனவே, அவருடைய அந்தப் பரபரப்பை - பதட்டத்தை குறைப்பதற்காக நான் சொன்னதோடு மட்டுமல்ல, எனக்கு மெக்சிகோ நாட்டிற்கோ, நியூசிலாந்திற்கோ, நெதர்லாந்திற்கோ செல்வதைவிட ஒப்புக் கொண்ட என் கழகக் கூட்டத்தில் பேசுவதுதான் என் முதல் கடமை. அதைத்தான் சொற்பொழிவாளர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். கழக நிகழ்ச்சிகளுக்கு மேல் எதுவும் கிடையாது. அதற்கு நான் உதாரணங்கள் சொல்கிறேன்.

அதற்கு முன்பாக பேசுகிற நேரம் எவ்வளவு என்பதைவிட, எப்படி பேசுகிறோம் என்பது முக்கியம் என்பதுதான் உங்கள் மனதில் பதிய வேண்டும். நான் சொன்னேன் அல்லவா, ஜூலியஸ் சீசர் கொல்லப்பட்டிருக்கின்றான். அங்கே இரங்கல் உரை ஆற்றுவதற்கு எனக்கும் கொஞ்சம் வாய்ப்பு தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு மார்க் ஆண்டனி வருகிறார். புதிய சொற்பொழிவாளர்களுக்கு சொல்கிறேன்.

### சிகாகோவில் விவேகானந்தர் உரை!

சிகாகோவில் விவேகானந்தரை உரையாற்றுவதற்கு இந்திய நாட்டிலிருந்து இந்து மதத்தின் சார்பாக அழைத்தார்கள். அவர் மேடையில் இருக்கிறபோது மனதில் பெரிய குழப்பம். இவ்வளவு பெரிய கூட்டத்தில் எப்படி பேசப் போகிறோம்? எனவே என்ன செய்கிறார் என்றால், நகர்ந்து நகர்ந்து கடைசியாகவே உட்கார்கிறார். அடுத்து பேச அழைத்து விடுவார்களோ என்ற ஒரு தயக்கத்தில் நகர்ந்து நகர்ந்து உட்கார்ந்து, பேச அழைக்கலாம் என்கிறபோது, வேறு யாரையாவது பேச சொல்லுங்கள் என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்திருந்த அவரை, இறுதியாக இப்போது நீங்கள் பேசினால்தான், இல்லாவிட்டால் இந்த வாய்ப்பை நீங்கள் இழக்க நேரிடும் என்றவுடன் வந்து பேசுகிறார். பேசுகிறபோது, முதல் இரண்டு சொற்களிலேயே அங்கிருந்த மக்களின் மனங்களை வெல்கிறார். அதுதான் மிகவும் முக்கியம். பேச ஆரம்பித்தவுடன் எதிரே இருப்பவர்களின் மனம் கவர வேண்டும். பின்னர், அவர்களுடைய மனதில் பதியும் கருத்துக்களை சொல்ல வேண்டும் என்பதற்கு அது ஒரு உதாரணம். அதுவரை அமெரிக்க நாடு கேட்டிராத சொற்றொடரை பயன்படுத்தினார். ‘லேடிஸ் அண்ட் ஜென்டில்மேன்’ என்று ஒலித்த அந்த நாட்டில், ‘பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ்’ என்று ஆரம்பித்தார். அரங்கத்தில் கரவொலி ஆரம்பித்தது. பின்னர், அவர் கருத்துக்களுக்கு வரலாறு முக்கியத்துவம் தர ஆரம்பித்தது அது வேறு.

அதுபோல, சில நிமிடங்கள் வாய்ப்பு தாருங்கள் என்று கேட்டு செல்கிறான் ஆண்டனி. அவனுடைய மனதில் இருக்கும் என்ன ஓட்டம் என்பது, இந்த கொலை தவறானது என்பதை மக்களுக்கு சொல்ல வேண்டும். பெரும் கூட்டம் ஆர்ப்பரிக்கும் கூட்டம், அந்த அளவிற்கு அறிவும் நாகரீகமும் இல்லாதவர்கள் என்று சொல்ல முடியாது. மாறாக உணர்ச்சிவசப்பட்டு நிற்கின்ற கூட்டத்திற்கு முன்னால், ஆண்டனி பேச ஆரம்பிக்கிறான். ‘I come to bury Caesar, not to praise him’. நான் பெரும்பாலும் தமிழில் பேசுகிறபோது ஆங்கிலச் சொற்களை பயன்படுத்துவதில்லை. தவிர்க்க முடியாத இடங்களில் நான் ஒன்று இரண்டை பயன்படுத்துகிறேன். அது உங்களுக்கும் தேவையான பயிற்சி. இது அண்ணா கற்றுத் தந்தது. அண்ணாவைப்போல் ஆங்கில புலமை உள்ளவர்கள் யாருமே இல்லை. அவரைப்போல வார்த்தைகளில் விளையாடுவது யாருமே கிடையாது.

### தமிழ்நாட்டை திரும்பி பார்க்க வைத்த அண்ணா!

நாடாளுமன்றத்தில் ஒருமுறை இரண்டு நிமிடம் அண்ணாவிற்கு கொடுத்தபோது, இரண்டு நிமிடத்தில் என்ன பேசுவது என்று கேட்டார்கள். இப்போதுகூட எங்களின் பல பேருக்கு அப்படித்தான் இரண்டு நிமிடம், மூன்று நிமிடம் மட்டும்தான் வாய்ப்பு கிடைக்கும். மணிக்கணக்கில் எல்லாம் வாய்ப்பு கிடைக்காது. மிகவும் அதிகம் நேரம் கிடைத்தால் 15 நிமிடம், அவ்வளவுதான். அண்ணா முதன்முதலாக நாடாளுமன்றம் சென்றிருந்தபோது, அவருடைய தோற்றம், கணவான்கள் இருக்கிற அவை; மன்னர்களுடைய இளவரசர்கள் அமர்ந்திருக்கும் அவை; பெரிய தொழில் அதிபர் இருக்கிற அவையில், குள்ளமான உருவத்தோடு ஒரு கைத்தறி வேட்டியும், ஒரு கைத்தறி சட்டையும், மேலே ஒரு துண்டோடு அண்ணா நுழைகிறார். யாருடைய பார்வையையும் கவருகின்ற தோற்றம் அல்ல அது. அதில் பேச அழைக்கிறபோது, அண்ணா எழுந்து சொல்கிறார், ‘I am from Madras. Sorry, prevented to say Tamilnadu’.

‘I come to bury Caesar, not to praise him’ என்று ஆண்டனி ஆரம்பித்தான் அல்லவா. “நான் அவனைப் பாராட்ட வரவில்லை. அவனை புதைப்பதற்காகத்தான் வந்திருக்கிறேன்” என்று ஆரம்பித்தவுடன் கூட்டம் அவன் பேச்சை கேட்க ஆரம்பித்தது. அதுபோல அண்ணா ஆரம்பிக்கிறார், ‘I am from Madras. Sorry, prevented to say Tamilnadu’. என்ன புரிகிறது? எதைச் சொல்லக் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறோமோ, அந்தச் சொல்லைப் பயன்படுத்துகிற சாமர்த்தியம். இங்கே வருகிறபோது ஒரு தோழர் - எனக்கு நெருங்கியவர் வந்து, ஏடாகூடமாக ஏதாவது பேசுகிறார் என்று வைத்துக் கொள்வோம். நான் உடனே அவரிடம் கோபமாக, ‘உன்னை முட்டாள் என்று திட்ட நினைக்கிறேன். ஆனால் இத்தனை பேருக்கு முன்னால் அதை நான் சொல்ல விரும்பவில்லை’. என்ன நடக்கிறது? எனவே, நான் என்ன சொல்ல வேண்டுமோ, அதை சொல்லிவிட்டேன் அல்லவா… அதைப்போல அண்ணா சொல்கிறார், ‘I am from Madras. Sorry, prevented to say Tamilnadu’. நான் தமிழ்நாடு என்று சொல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறேன். அங்குதான் ஆரம்பம் என்றார். நேரு நிமிர்ந்து பார்த்தார். அடுத்த நிமிடமே அண்ணா சொன்னார், ‘My country is economically ill; educationally dull; industrially nill; but culturally well’ என்றார். அன்று நிமிர்ந்த நாடாளுமன்றம், இன்னமும் தமிழ்நாடு நோக்கி பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. எதற்காக சொல்கிறேன் என்றால், அவ்வளவு புலமைமிக்க அண்ணா, பொதுமேடைகளில் பேசுகிறபோது, ஆங்கிலச் சொற்களை பயன்படுத்த மாட்டார். வளர்கின்ற நாளைக்கு இந்த இயக்கத்தை மேடையில் நின்று காப்பாற்றப் போகின்ற தம்பிமார்களுக்கும் - தங்கைகளுக்கும் உரிமையோடு சொல்வேன். இதையெல்லாம் நீங்கள் பின்பற்ற வேண்டும்.

வசன நடையில் ஆரம்பித்தால், அதே போக்கிலே – நடைமுறை பேச்சில் ஆரம்பித்தால், அதே போக்கிலே – இங்கு பேசி இருவருக்கும் அதுதான் வேறுபாடு. முதலில் பேசியவர் வசன நடையில் பேசினார். இரண்டாவது பேசியவர் நடைமுறை மொழிக்கு வந்தார்.

### ஒருவரின் பேச்சு - பெருங்கூட்டத்தையே மாற்ற முடியும்!

அப்படி பேசிய ஆண்டனி, மெல்ல மெல்ல மெல்ல பேச ஆரம்பிக்கிறபோது, கூட்டம் சலசலப்பு நிற்கிறது. மெல்ல இவன் பேச்சைக் கேட்க ஆரம்பிக்கிறது. அவன் பேச்சோட்டத்திலே சொல்கிறான், மீண்டும் மீண்டும் அதையே சொல்கிறான். சீசரை நியாயப்படுத்திக் கொண்டே சொல்கிறான். நான் அவனை புகழ்வதற்கு வரவில்லை. அவனைப் புதைப்பதற்காகத்தான் வந்திருக்கிறேன் என்று, பேச்சு முடிவில் அவன் சொல்லி முடித்த கருத்து, மிக நீண்ட நேரம் அல்ல, மிகச் சில நிமிடங்களில் சீசர் கொலை செய்யப்பட்டது படுபாதகம். இது கண்டிக்கப்பட வேண்டியது என்ற உணர்வை மக்களுக்கு தந்தவுடன், அது நேரம்வரை அவனை கொலை செய்தது சரி என்று கூக்குரலிட்டுக் கொண்டிருந்த மக்கள் கூட்டம், கொலை செய்தவர்கள் நோக்கி திரும்ப ஆரம்பித்தது. என்ன புரிகிறது? ஒருவனுடைய சொற்பொழிவு என்பது, ஒரு பெரும் கூட்டத்தையே மாற்ற முடியும் என்பதற்கு உதாரணம். தமிழன் பிரசன்னா, நான் சொன்ன திருச்சி நிகழ்ச்சியில் பேசுகிறார். அப்போது எனக்கு அவரை தெரியாது, அவருக்கு என்னை தெரிந்திருக்கும். அவர் – மாணவர்களிடம் பேசுகிறபோது சொன்னார், – “விவேகானந்தர் சொன்னார், எனக்கு 100 இளைஞர்களைத் தாருங்கள். நான் இந்த நாட்டை தலைகீழாக மாற்றிக் காட்டுகிறேன் என்று சொன்னார். நாங்கள் 100 பேர் அல்ல, 1,000 பேர் இதோ காத்திருக்கிறோம். எங்களுக்கு ஒரு விவேகானந்தர் தேவை” என்று சொன்னார். உடனே அந்த அரங்கமே கரவொலி எழுப்பியது. பின்னர் நான் பேச வந்தபோது சொன்னேன், “தம்பி, 100, 1,000 இளைஞர்கள் இருக்கிறீர்கள். விவேகானந்தரை தேடுகிறீர்களே, தேடாதீர்கள்… நீங்கள் விவேகானந்தராக மாறுங்கள். எல்லோரும் உங்கள் பின்னால் வருவார்கள்”. முதலில் யாரெல்லாம் அவருக்கு கைதட்டினார்களோ, அவர்கள் எல்லாம் எனக்கும் கைதட்டினார்கள். இதுதான் மக்களுடைய மனப்பான்மை. சொல்லுகிற கருத்தில் இருக்கும் தன்மை.

இங்கே முதலில் பேசிய தம்பி தமிழ்வாணன், இட ஒதுக்கீட்டைப் பற்றி எல்லாம் பேசினார். அதைப் பேச்சோட்டிலே சொன்னார். பின்னர் அவர் பயிற்சி முகாம்களில் பேச்சுக்கலை கேட்டிருக்கிறேன் என்று சொன்னார். ஒரு மாணவர்களுடைய பெருங்கூட்டம். அதில் பேசி முடிந்தவுடன் கேள்விக்கான நேரம் ஒதுக்கப்படுகிறது. ஒரு மாணவர் எழுந்து கேட்கிறார், “சாதி இல்லை. சமத்துவமான சமுதாயம். ஏற்றத்தாழ்வு இல்லை, எல்லோரும் ஒன்று என்று பேசுகிறீர்களே… சாதியினால் உயர்வு தாழ்வு இல்லை என்று சொல்கிறீர்களே… எங்களுக்கு அது பற்றி கவலை இல்லை. நான் பள்ளியிலோ, கல்லூரியிலோ சேர நுழைகிறபோது முதலில் அங்கே கேட்கிற கேள்வி, பெயருக்கு பின்னால் நீ என்ன ஜாதி? என்பதுதான். அதற்கு நாங்களா காரணம் என்று கேட்டோம்”. இந்த கேள்வியை இங்கிருக்கிறவர்கள் நன்றாக கவனியுங்கள், கவனித்தால் அதில் இருக்கிற நியாயம் புரியும்.

இந்த நாட்டில் இஸ்லாமியர் – இந்து வேறுபாடு இருக்கக் கூடாது என்பதற்காக, மகா பேரரசர் அக்பர், ‘தீன் இலாஹி’ என்ற புதிய சமயத்தை உருவாக்குகிறார். அதில் இரண்டு பேரும் ஒன்று என்பதைப்போல. என்ன உணர்த்த நினைக்கிறார் என்றால், ஒருவனுக்கு சொல்லித் தருகிற காரணத்தால் தான் அவனுக்கு மதம் தெரிய வருகிறது. அதில் இருக்கும் வேறுபாடு தெரிய வருகிறது என்பதற்காக, சொல்லாமலே வளர்த்தால் எப்படி இருக்கும்? என்று முயற்சி செய்கின்ற வகையில், 10 குழந்தைகளை பிறந்தவுடன் தேர்ந்தெடுத்து, வெளியில் - கொஞ்சம் தொலைவில் இருக்கும் தீவிற்கு வாய் பேச முடியாத ஊமைகளிடம் அனுப்பி, 10 வயது வரை வளர்த்துவிட்டு அழைத்து வர சொல்கிறார். பின்னர் மன்றத்திலே நிறுத்திவிட்டு, அங்கே இருந்த எல்லோரிடமும் சொன்னார், “சொல்லித் தந்தால்தான் மதம் என்பது தெரியும். இந்த குழந்தைகளைப் பார்த்து நான் கேள்வி கேட்கிறேன். காரணம், இதுவரை அவர்களுக்கு யாரும் – எதுவும் சொல்லித் தரவில்லை. மதம் என்றால் என்ன என்று தெரியுமா? பதில் இல்லை. கடவுள் என்றால் என்ன என்று தெரியுமா? பதில் இல்லை. யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? பதில் இல்லை. பார்த்தீர்களா… அவர்களுக்கு எதுவும் தெரியாது. காரணம், அவர்களுக்கு சொல்லித் தரவே இல்லை” என்றார். அப்போது அவையில் இருந்த ஒரு அமைச்சர் எழுந்து சொன்னார், “அவர்களுக்கு பேசவே தெரியாது”. காரணம், வளர்த்தவர்கள் ஊமைகள். ஊமைகளாக இருக்கிறவர்களால் பேச வாயற்றதன் காரணமாக எதுவும் சொல்லித் தர முடியாது. சொல்லித் தர வேண்டும், ஆனால் சரியானதை சொல்லித் தர வேண்டும் என்பதுதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

### நூலகத்திற்குச் சென்று படியுங்கள்!

அதுபோல, நீங்கள் கொஞ்சம் மெல்ல மெல்ல பார்த்தால், அந்த தம்பி பேசுகிறபோது கேட்டார், “நான் எதையெல்லாம் முதலில் படிக்க வேண்டும்”. பத்திரிகைகளில் விடுதலை, முரசொலி போதாது. அது இன்றைக்கு வருகிற செய்திகளையும் சேர்த்து சுமந்து வரும். நூலகத்திற்குச் செல்லுங்கள். அண்ணா அறிவாலயத்திற்குச் செல்லுங்கள்; பெரியார் திடலுக்குச் செல்லுங்கள். அண்ணா எழுதிய கடிதங்களை படியுங்கள். கலைஞர் எழுதிய காவியங்களை படியுங்கள். அங்கு இருக்கும் குடியரசு, பழைய ஏடுகளை படியுங்கள். உங்களுக்கு வரலாறு தெரியும் என்பதைவிட, உங்களுக்கு பல உண்மைகள் தெரிய வரும். உண்மைகள் தெரிய வருகிறபோது, உங்களுடைய உணர்ச்சி அதிகமாகும். நீங்கள் ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பது தெரியும். எனவே, படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன்.

சற்றேறக்குறைய நீங்கள் எல்லோருமே தயார் செய்து கொண்டு வந்தவர்கள்தான். ஒரு பொருள் குறித்து பேச வேண்டும் என்பதற்கு, அதற்கு தேவையான செய்திகளை நீங்கள் தேடுகிறீர்கள். எங்கு சென்று தேடுவீர்கள்… கடைவீதியிலா? அல்ல. ஒரு நூலகம் என்பது என்ன? புத்தகங்கள் அடுக்கி வைத்திருக்கும் அலமாரிகள் நிரம்பியது அல்ல. அந்த நூலகத்திற்குள் நீங்கள் நுழைகிறபோது ஒரு 10,000 அறிஞர்கள் காத்திருக்கிறார்கள். உங்களுக்கு என்ன சந்தேகம், நான் அதை தெளிவுபடுத்துகிறேன் என்று விளக்குவதற்காக. ஒவ்வொரு நூலிலும் சிந்தனையாளர்களுடைய கருத்துக்கள் அடங்கியிருக்கும். ஒவ்வொன்றிலும் வரலாறு அடங்கியிருக்கும். ஒவ்வொன்றிலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஏராளம் இருக்கும். எனவே, படிக்கிற பழக்கம் முதலில் சொற்பொழிவாளர்களுக்கு வர வேண்டும்.

### மேடை மூலம் மாற்றத்தை கொண்டு வந்த இயக்கம்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று உள்ள ஒரு தனிப்பெரும் சிறப்பு என்பது, மேடையின் மூலமாக ஒரு பெரும் மாற்றத்தை கொண்டு வரலாம் என்ற சரித்திரத்தை எழுத ஆரம்பித்தது நம்முடைய கழகம்தான். நான் திராவிட இயக்கத்தின் வரலாற்றை பேசலாம். என்னிடம் அமைச்சர் - மாவட்டச் செயலாளர் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் என்ற வகையில், சேகர்பாபு எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? என்று கேட்டார். “எனக்கு தெரியாது. நான் நிர்ணயித்துக் கொண்டு வருவதில்லை. என்னுடைய பேச்சு போய்க் கொண்டே இருக்கிறபோது பல செய்திகள் ஊடே

தொடர்ச்சி 6-ஆம் பக்கம்




கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வெள்ளிமலையில் உள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில்,தேசிய தொல்குடி நாளை முன்னிட்டு, தொல்குடி பள்ளி இலச்சினையை (LOGO) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் 15.11.2024 அன்று வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து பள்ளி வளாகத்தில் மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகள் நட்டு வைத்து,குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டார்,உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணாதுரை, ம.தொ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் உமா மகேஸ்வரி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 9 தமிழறிஞர்களின்

# நூல்கள் நாட்டுடைமை - நூலுரிமைத் தொகை ரூ.90 இலட்சம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, நவ.20

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் 2024–25 ஆம் ஆண்டிற்கு 9 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத்தொகை ரூ.90 இலட்சம் வழங்கினார்.

சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (18.11.2024) 2024–25 ஆம் ஆண்டிற்கு 9 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத்தொகை ரூபாய் 90.00 இலட்சம் வழங்கி செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:–

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், இன்றைக்கு ஒன்பது தமிழறிஞர்களுக்கான நூல்களை நாட்டுடமையாக்கப்பட்டு, விருது வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, நினைவில் வாழக்கூடிய கவிஞர்களுடைய குடும்பத்தாருக்கு அவர்களுடைய மரபுரிமை வாரிசுதாரர்களுக்கு இந்த விருதுகள் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களும் நீண்ட நாட்களாக இந்த விருதுகளை எதிர்ப்பார்த்திருந்தார்கள்.

அரசு, தங்கள் குடும்ப த்தார் கவிஞர்கள் எழுதிய நூல்களை எல்லாம் நாட்டுமையாக்குவார்கள் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதை முதலமைச்சர் அவர்கள் அந்த எதிர்ப்பார்ப்பை ஈடு செய்யக்கூடிய வகையில் சட்டமன்றத்தில் அறிவிப்பிற்கிணங்க இன்றைக்கு அதை நாட்டுமையாக்கப்பட்டு, அவர்களுக்கு பரிசுத் தொகை தலா 10 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையில், அவர்கள் எல்லாம் அந்த விருதுகளை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேலும், நாட்டுடமையாக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

தமிழ் அறிஞர்களுக்கு மரியாதை செய்கின்ற வகையிலும், மேலும் தமிழ் மொழியை செம்மைப்படுத்துகின்ற வகையிலும் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றைக்கு தமிழ் வளர்ச்சித் துறை அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி ஆலோசனைக்கிணங்க மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு வருகிற நவம்பர் 27 கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை இளைஞர் எழுச்சி நாளாக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாதம் முழுவதும் கொண்டாடுவது, வருகிற நவ 28,, 29 ஆகிய தேதிகளில் விழுப்புரம் வருகை தரும் முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது, 2026 தேர்தலில் தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைய இளைஞர் அணி நிர்வாகிகள் அயராத கழகப் பணியாற்றிட வேண்டும் என பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ஆர். கற்பகம், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.அன்பு, ராஜவேல், எஸ்.பாலாஜி, பா.கலைவாணன், ஏ.சி.கே.பிரேம், ஏ.கே தேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் ஒன்றிய,' நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற

# கரூர் மாவட்ட மாணவர்களுக்கு பாராட்டு!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்!

கரூர், நவ.20-

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற கரூர் மாவட்ட மாணவ - மாணவியருக்கு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பாராட்டு தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், தமிழ்நாடு இளைஞர்களின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆசிகளுடன், கரூர் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில், தடகளம், வாலிபால், பேஸ்கட் பால், கால்பந்து, வளைகோல் பந்து, நீச்சல், பழுதூக்குதல், சிலம்பம், கோகோ உள்ளிட்ட 21 வகையான போட்டிகள், மாவட்ட அளவில், பள்ளி மாணவ மாணவிகள், கல்லூரி மாணவ மாணவிகள், அரசு பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள், பொது பிரிவினர் என ஐந்து பிரிவின் கீழ் நடைபெற்றது.

கரூர் மாவட்டத்தில் 8,672 நபர்கள் இப்போட்டிகளில், மாவட்ட அளவில் கலந்து கொண்டார்கள். இதில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு தலா 3000, 2000 & 1000 வீதம் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

மேலும் கரூர் மாவட்டத்திலிருந்து மாநில அளவிலான போட்டிகளில் 706 மாணவ - மாணவிகள் கலந்து கொண்டனர்.

மாநில அளவில் முதலமைச்சர் கோப்பையில், ஜூடோ விளையாட்டுப் போட்டியில் முதல் இடம் பிடித்த ஆர்.ஆண்டனி லட்சன், சி.ரகுபதி மற்றும் எஸ். சகானா ஆகியோர் தங்கப்பதக்கம் மற்றும் தலா ஒரு லட்சம் பரிசு பெற்றனர்.

மாநில அளவில் முதலமைச்சர் கோப்பையில், ஜூடோ விளையாட்டுப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற, எஸ்.மகாலட்சுமி, எ.அனுக்ஷா மற்றும் டென்னிஸ் போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்ற, வி.திருமுருகன் ஆகியோர் வெள்ளி பதக்கம் மற்றும் தலா 75 ஆயிரம் பரிசும் பெற்றனர்.

மாநில அளவில், ஜூடோ விளையாட்டுப் போட்டியில், மூன்றாவது இடம் பெற்ற எ.காவியா, எஸ்.பிரதிஸ், ஸ்ரீ தீபனா, ஜி.அபிதா ஸ்ரீ, எஸ் கவின்குமார், எம்.பிதிபா, டி.எல். லோகேஷ்ராம், எஸ்.ராம்குமார், பி.தர்ஷினி ஆகியோர் வெண்கல பதக்கமும் மற்றும் தலா ரூ. 50,000 பரிசும் பெற்றனர். வரிசை பெற்ற அனைவருக்கும் கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

கரூர் மாவட்டத்தில் 15 மாணவ - மாணவிகள் மொத்தம் ரூ.9,75,000/ பரிசு பெற்று கரூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் மாநில அளவில் கரூர் மாவட்டம் 22ம் இடத்தை பிடித்துள்ளதற்கு அனைவருக்கும் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வாழ்த்து தெரிவித்தார்.

சென்னை தெற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் - மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்

# க.தனசேகரன் தாயார் - திருமதி க.அயோத்தி அம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, நவ.20-**

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கழக முன் னோடியுமான க.தனசேகரனின் தாயார் திருமதி அயோத்தி அம்மாள் அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

அன்னாரின் மறைவுக்குத் தமது இரங்கலைத் தெரிவித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னைப் பெருநகர மாநகராட்சியின் கணக்கு நிலைக்குழுத் தலைவருமான க.தனசேகரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. க.அயோத்தி அம்மாள் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

உடனடியாக, தனசேகரன் அவர்களைத் தொடர்புகொண்டு துயருற்றிருக்கும் அவரைத் தேற்றினேன்.

அயோத்தி அம்மாள் அவர்களது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கழகத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும்

# அரசு - அரசு உதவி பெறும் கலைக் கல்லூரி ஆசிரியர்கள் மறு நியமனம்!

## அரசாணை வெளியீடு! உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!

சென்னை, நவ.20-

தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வி துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலைக் கல்லூரி ஆசிரியர்கள் மறு நியமனம் தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அரசு செய்தி வெளியீடு வருமாறு:-

அரசு, அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஓர் கல்வி ஆண்டின் இடையில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் நிலை எழும் பொழுது மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படும் என்ற காரணத்தால், அவ்வாசிரியர்களை வயது முதிர்வு மாதம் ஓய்வு பெற அனுமதித்து மீண்டும் அக்கல்வி ஆண்டின் இறுதி வரை மறு நியமனம் செய்யும் முறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான பாட வகுப்புகள் ஏப்ரல் முதல் வாரத்துடன் முடிவடைந்து விடுவதாலும், மே மாதத்தில் தேர்வுகள் / விடைத்தாள் திருத்தும் பணிகள் மட்டுமே நடைபெறுவதாலும், கல்வி ஆண்டின் இடையில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி வரை மறு நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலனை கருதிற்கொண்டு, நிர்வாக பதவிகளான கல்லூரி கல்வி இணை இயக்குநர் / மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் / கல்லூரி முதல்வர் மற்றும் இதர கல்விசார் பணியாளர்களான கல்லூரி நூலகர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் பதவிகள், நீங்கலாக கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட் பட்டு 2025 மே மாதம் 31 வரை மறு நியமனம் நீட்டித்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



தேனி வடக்கு மாவட்டம் போடி நகர பகுதிகளில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., வழிகாட்டுதலின்படி வாக்காளர் சரிபார்ப்புப் பணியை போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் அறங்காவலர் குழு தலைவர் போடி தொகுதி நகர பார்வையாளர் செந்தில் முருகன், நகரச் செயலாளர் புருஷோத்தமன் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

# டெல்டாவில் விடிய விடிய மழை!

திருச்சி, நவ. 20-

குமரிக்கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நாகை மாவட்டத்தில் முதல் நாகை, வேதாரண்யம், வேளாங்கண்ணியில் மழை பெய்து வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் மதியம் முதல் மாலை வரை பலத்த மழை பெய்தது.

முத்துப்பேட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் அதிகாலை வரை பலத்த மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்திலும் நேற்று முன்தினம் மாலை முதல் நள்ளிரவு வரை பலத்த மழை பெய்தது. காரைக்கால் மாவட்டத்தில் நேற்றிரவு முதல் இன்று காலை வரை மழை பெய்தது. புதுக்கோட்டை மாநகரில் நேற்று முன்தினம் மாலை முதல் இரவு வரை தூறல் மழை பெய்தது. திருச்சி மாவட்டத்தில் துவரங்குறிச்சி, மணப்பாறை பகுதியில் நேற்று முன்தினம் மாலை முதல் மழை பெய்தது. திருச்சி மாநகரில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று அதிகாலை வரை தூறல் மழை பெய்தது. டெல்டாவில் தொடர் மழை பெய்வதால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அம்மாபேட்டை, புத்தூர் சாலியமங்கலம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் நாற்று நட்டு சுமார் 30 நாட்களே ஆன 500 ஏக்கரில் இளம் சம்பா, தாளடி பயிர்கள் முற்றிலும் நீரில் மூழ்கின. தொடர்ந்து மழை நீர் வடியாததால் பயிர்கள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வேதாரண்யத்தில் பெய்த பலத்த மழையால் ஆறுகாட்டுத்துறை கீழத்தெருவைச் சேர்ந்த ராஜலட்சுமி என்பவரின் ஓட்டு வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே கடைக்கண் விநாயக நல்லூரைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி சின்னப்பாவின் (60) கான்கிரீட் வீடு நேற்று இடிந்து விழுந்தது. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அடுத்த பாண்டி செம்பிய மங்கலத்தை சேர்ந்த வசந்தா என்பவரின் கூரை வீட்டின் ஒரு பகுதி சுவர் இடிந்து விழுந்தது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எஸ்.ஏ.ஜி. ராபி

### நவம்பர் 20 (2004)



**திருச்சி நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பணியாற்றியவர்.**

**செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.**

**கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.**


**மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெங்களூர் வி. சிவசங்கர்

### நவம்பர் 20 (2003)



**கருநாடக மாநில பொறுப்புக்குழுச் செயலாளராக பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.**

**பெங்களூர் மாநகராட்சி அலசூர் வட்டத்தில் நான்கு முறை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநகராட்சி சுகாதாரக்குழுவிற்கு தலைவராகவும் மற்ற காலங்களில் அனைத்து குழுக்களிலும் உறுப்பினராகவும் தேர்வு பெற்று பணியாற்றியவர்.**

**1997இல் கருநாடக மாநில அரசு, இவரது மாநகராட்சி மன்ற உறுப்பினர் பணியினை பாராட்டி "கெம்பே கவுடா" விருது வழங்கி பாராட்டியது.**

**மேலும் இவரது தொண்டினை போற்றும் வகையில் இவர் வசித்த அலசூர் பகுதியில் உள்ள முக்கிய சாலைக்கு "சிவசங்கர் சாலை" என பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

**விலைவாசி உயர்வு, இந்தி எதிர்ப்பு ஆகிய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**